ஸ்ரீஜிநாய நம:

# மேருமந்திர புராணம்

மூலமும் உரையும்

## 8. வச்சிராயுதன் அனுத்தரம் புக்க சருக்கம்

813. அரசனாய நல் அரதனாயுதன்
பிரச மார்குழல் பிணைய னாரொடும்
வரைசெய் தோளவள் மகிழ்ந்த வார்த்தையை
உரைசெய் வன்இனி உரக ராசனே.

நாகேந்திரனே! மிகச் சிறந்த மன்னனாகிய இரத்தினாயுதன் மலைபோன்ற வலிமைமிக்க தோளினையுடையவனாய், வண்டுகள் மொய்க்கும் அழகிய கூந்தலையுடைய பெண் மான் போன்ற மங்கையருடன் மகிழ்ந்திருந்த, இன்ப வாழ்வைப் பற்றி இனிக் கூறுகின்றேன் கேட்பாயாக.

814. வாம மேகலை மயிலம் சாயலார்
காமக் கோட்டியுள் கழுமும் காதலால்
சேம நல்லறம் செப்பில் தீயிடை
ஆமை போல்அவன் அவல மெய்துமே.

அழகிய மேகலையணிந்த மயில் போன்ற சாயலையுடைய, விரும்பத் தக்க மங்கையரிடத்தில் அன்புமிக்கவனாய், நன்மை தரவல்ல நல்லறத்தின் பால் வெறுப்புற்று, அதைக் கேட்கும் போது நெருப்பிடைபட்ட ஆமை போல் துன்புற்றான்.

815. அரசும் இன்பமும் கிளையும் ஆயுவும்
விரைசெய் தாரவன் வீயும் என்றெணான்
திரைஉ டுத்தஇப் படிமி சைத்தனது
அரசு நிற்பதே யாக எண்ணுமே.

தான்யெய்திய அரசும், இன்பமும், சுற்றமும், ஆயுளும் அழியக் கூடியது என்பதை மணம் மிக்க மாலையணிந்த அவ்வேந்தன் உணராதவனாய் அலை கடலால் சூழப்பட்ட இவ்வுலகில் தனது ஆட்சி அழிவற்றது, நிலையானது என்று நம்பினான்.

816. பொறியின் போகமும் புண்ணியத்தின் வந்து
உறுவது என்றெணான் உம்பர் இன்பமும்
மறுவில் வீடும்மற் றில்லை மாய்ந்தவர்
பிறவி யும்இலை என்று பேசுமே.

தான் அடைகின்ற இன்பங்களானவை தனது புண்ணியத்தின் பயனாகும் என்னும் உணர்வில்லாததோடு தேவ வாழ்வோ, குற்றமற்ற வீடுபேறோ, இறப்பவர் மீண்டும் பிறப்பர் என்பதே இல்லை என்றும் பேசினான்.

817. கற்ற மாந்தராய்க் காமச் செல்வத்தில்
பெற்ற இன்பத்தைப் பிழைக்க விட்டுப்போய்
மற்றும் இன்பமேல் வரவ ருந்துதல்
உற்ற ஊன்நரி விட்ட தொக்குமே.

மேலும், அவன் கற்றறிந்த மனிதர்களாய் பொருந்திய செல்வத்தால் அடையும் இன்பத்தை அனுபவியாது விட்டுத் துறந்து போய் மேலும் பெரிய இன்பம் வேண்டி வருந்துதல் நரியானது நீரில் கண்ட மீனைக் கவ்விப் பிடிக்க வாயில் வைத்திருந்த இறைச்சியை இழந்ததைப் போன்றதாகும்.

818. துன்பத் தால்இன்பம் துய்த்தல் அல்லது
துன்பத் தால்இன்பம் துய்க்க எண்ணுதல்
அன்பில் காஞ்சிரம் ஆக்கி மாங்கனி
தின்குற்றது அஃதவர் சிந்தை வண்ணமே.

வருத்தித் தவம் செய்ததால் வருவது துன்பமே அதனால் இன்பத்தைப் பெற எண்ணுதல் எட்டிமரத்தை வளர்த்து அதில் மாம்பழத்தைப் பெற்று உண்ண நினைப்பதற்கு ஈடாகும், அவர்கள் எண்ணம் அத்தகையதே.

819. வினைகள் வேறுபட்டு உதயம் செய்தலால்
இனைய சிந்தைய னாகிச் செல்லுநாள்
முனிவன் வச்சிர தந்தன் மொய்ம்மலர்
வனம னோகரம் வந்து நண்ணினான்.

தீய வினைகள் உதயத்திற்கு வந்ததால் அரசன் இத்தகு தீய சிந்தனையுடையவனாய் செல்லுங்காலத்தில் வச்சிரதந்தன் என்னும் முனிவர், மன்னனுக்குரிய மனோகரம் என்னும் மலர் வனத்தில் தனது முனி சங்கத்தோடு வந்தடைந்தான்.

820. மேரு மால்வனப் பத்தி ராலத்துள்
வார ணம்மலை சூழ நின்றதும்
வீர மாதவர் சூழ மெய்த்தவன்
தார கைமதி தானும் ஒத்தனன்.

மேலான தவத்தையுடைய வஜ்ஜிர தந்த முனிவன்பான்மை நிறைந்த மாமுனிவர்கள் சூழ அவ்வனத்தில் தங்கி நின்ற காட்சி, மேருமலையானது பத்ராசலவனத்தில் திசை மலைகள் சூழ நின்றது போலவும், விண் மீன்களுக்கிடையே ஒளி வீசும் முழுமதி போலவும் விளங்கியது.

821. பிறவி மாக்கடல் பெயர்க்கும் ஆற்றலால்
இறைவன் அன்னவன் ஏந்து கொள்கையான்
மறுவின் மாதவன் வையம் மூன்றினும்
உறவி நின்றவாறு ஓத ஒன்றினான்.

பிறவிப் பெருங்கடலைக் கடக்கும் ஆற்றல்மிக்க பான்மையாளனாய் அருக பெருமானுக்கு நிகர்த்தவனாய் நல்லொழுக்கமுடையவனாய் குற்றமற்ற அம்மாமுனிவன் இம்மூவுலகத்திலும் உயிர்கள் பொருந்தி நிற்கின்ற மூவுலக நிலையை முனிவர்களுக்கு உபதேசித்தான்.

822. ஒன்றி ரண்டுஒரு மூன்று நாலைந்தாய்
நின்ற ஐம்பொறி நெறியின் வாழுயிர்
ஒன்று நீர்மர நிலநெருப்பு காற்று
என்றிக் காயமைந்து எய்தி வாழுமே.

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து ஆகிய வரிசையில் பொறிகளைப் பெற்ற நிலைகளில் வாழும் உயிர்களில் தொடு உணர்வாகிய ஒன்றை மட்டும் பெற்ற உயிர்கள் நீர், மரம், நிலம், நெருப்பு, காற்று ஆகிய இந்த ஐந்தையும் உடலாக எய்தி வாழும்.

823. நந்து சிப்பிசங்கு ஆதி நாவன
குந்து எறும்புகோ பாதி மூன்றன
வந்து தும்பிவண் டாதி நாலவைந்து
இந்தி யம்பசுநரர் நாகர் தேவராம்.

நத்தை, சங்கு, சிப்பி போன்றவை தொடுவுணர்வுடன் சுவையுணர்வையும் பெற்று இரு இந்திரிய உயிர்களாகவும், எறும்பு, பட்டுப்பூச்சி முதலியவை மேலே கூறிய இரு புலன்களுடன் கேட்டல் உணர்வுடன் மூன்று இந்திரிய உயிர்களாகவும், தும்பி, வண்டு, அந்து போன்றவை அவற்றுடன் பார்க்கும் சக்தி பெற்று நான்கு இந்திரிய உயிர்களாகவும் பசு, மனிதர், நரகர், தேவர் ஆகியோர் மனம் என்னும் ஐந்தாவது பொறியைப்பெற்ற ஐம்பொறி உயிர்களாகவும் அறியப்படும்.

824. உழுதல் கல்லுதல் அடைத்த லோடுகாய்
தழல்க ளாதிமண் ணுயிர்கள் மாய்ந்திடும்
அழலை ஆற்றுதல் அவித்தல் ஆதியாய்த்
தழலு டம்பன தானும் மாயுமே.

நிலத்தை உழுதல், பள்ளம் தோண்டுதல், பள்ளத்தைத் தூர்த்தல், நெருப்பு எரிதல் ஆகிய இவற்றால் மண்ணுயிர்கள் மாயும், வெப்பத்தைக் குறைத்தல், நெருப்பை அவித்தல் ஆகியவற்றால், நெருப்பை உடலாகப் பெற்றவை அழியும்.

825. திரைஅ லைப்பவும் தீயிற் காய்ச்சவும்
தரைந னைப்பவும் சாங்கள் நீருயிர்
வரையோடு எற்றவும் வட்டம் ஆதிகள்
பொரவும் வாதகா யங்கள் பொன்றுமே.

மேலும், அலை வீசுவதால், நீரைக் கலக்குவதால் நீரைச் சூடேற்றுவதால், பூமியை நீரால் நனைப்பதால், நீர் உடலிகள் இறக்கும், மலையில் மோதும் சூறாவளியால், சுழற்காற்றால் காற்றுடலிகள் மாய்ந்துவிடும்.

826. வெயிலும் மாரியும் மிக்க வாதமும்
அயில்செய் வெம்படைத் தீயோ டாதியால்
பயிர் மரம் முதல்பசிய காயமாம்
உயிர்கள் நொந்துவெந் துயர் உழக்குமே.

எரியும் தீ, கொடிய வெயில், பெருமழை. கடுங்காற்று கூரிய ஆயுதங்கள் ஆகிய இவற்றால், பயிர்கள் மரங்கள் முதலியவற்றை உடலாகயுடைய உயிர்கள் துயருற்று நாசமாகும்.

827. மால்க டல்பிறந் தாலும் ஆவதென்
மேலை வெவ்வினை நிற்கு மாய்விடின்
வால்வ ளைமக ரங்கள் சிப்பிமீன்
காலன் அன்னவர் கையின் மாயுமே.

மேலும், வெண்ணிறச் சங்கும், மகர மீன்களும் முத்துச் சிப்பியும் மற்றுமுள்ள மீனினங்களும் கடலிலே பிறந்தாலும் அவற்றின் பாப வினை உதயமானால், எமனுக்கு நிகரான கொலைக்காரர்களினால் முடிவை எய்தும்.

828. மலையும் வாவியும் கானு மேவியும்
வளையும் வில்லும்வான் பொறியும் ஆதியாய்
அலை செய் வார்களுக்கு அஞ்சி நெஞ்சழிந்து
உலைவி லாதவெந் துயர் உழக்குமே.

அடுத்து, விலங்கினங்கள் மலைகள், காடுகள், நீர் நிலைகள் இவற்றில் பொருந்தியதாலும், வலை, வில் மற்றும் கொடிய பொறிகள் ஆகிய இவற்றின் துணைகொண்டு பிடித்துக்கொல்லும் கொடியவர்களுக்கு அஞ்சி மனம் கலங்கி கடும் துன்பங்களை அனுபவிக்கும்.

829. ஊன காரரும் போர் செய் வீரரும்
தீஞர் வேள்வியும் தீய தெய்வமும்
ஈன மானவர் ஆதி எய்துவர்
தானு டம் பிடும் சார்ந்த சாதியே.

ஊன் உண் போரால், போர் வீரர்களால், ஞான மற்றவர்கள் இயற்றும் வேள்வியால், கொடிய தெய்வங்களால், இழிதொழில் புலையரால் இன்னும் இது போன்ற பாபிகளால், விலங்கினத்தைச் சேர்ந்த ஜீவன்கள் உடலை நீத்து மரண மடையும்.

830. சூரி ரும்பினால் குடுமி போழவும்
பாரம் ஏற்றவும் பாதம் யாப்பவும்
வார ணம் துய ரெய்தும் மற்றைய
ஏரும் ஊர்தியும் ஈர்த்து நையுமே.

மற்றும் பெரிய அங்குசங்களால் பாகர்கள் மத்தகத்தைத் தாக்குதலாலும், அளவுக்கதிகமான சுமைகளை ஏற்றுவதாலும், கால்களை நெருக்கிப் பிணைப்பதாலும் யானைகள் துயர் எய்தும், எருது, குதிரை போன்றவை வண்டி ஏர் முதலியவைகளை இழுத்து நைந்து போகும்.

831. இப்படி விலங்கில் பிறப்பார்கள் தாம்
எப்படிப் பட்ட வர்என் றியம்பிடின்
மெய்ப்ப டத்துற வாது விழுத்தவத்து
ஒப்பில் மாயத்தி னோடு உழல் வார்களும்.

இத்தகு துன்பமெய்தும் விலங்குப்பிறவியில் பிறக்கக் கூடியவர்கள் எத்தகையோர் என்று சொல்வோமானால் அகமும், புறமும் ஒத்து உண்மையான துறவை மேற்கொள்ளாமல், மாயத் தன்மையோடு ஒப்பற்ற தப வேடம் புனைவோர் விலங்குகதியில் செல்வர்.

832. மோக மோடுமிச் சோதயத் தாலுமற்
றேக மாகிநான் கில்விலங் காயிடும்
காக மேயன காரிகை யார்மனத்து
ஆகும் மாயம் விலங்கினை ஆக்குமே.

கொடிய மோகனீய சாரித்திர வினையுடன் மித்யாத்துவ வினையும் உதயமானால், ஏகேந்திரியத்திலும், மேற்படி வினைகளின் சற்று குறைந்ததாக அமையின் முறையே இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து இந்திரியம் ஆகிய நால்வகை ஜீவகதிகளிலும் தோன்றும், மேலும் காகம் போன்ற நிலையற்ற பெண்களின் மனதில் தோன்றும் மாயத் தன்மையும் விலங்குப் பிறவியை அடைவிக்கும்.

833. உள்ளம் மெய்ம்மொழி ஒன்றுத லும்இலா
வெள்ளை மாந்தரும் வீழ்வர் விலங்கிடைத்
தள்ள வாரஞ்செ யாத்தனந் தேடுமக்
கள்ள நெஞ்சினர் வீழ்கதி யும்இதே.

மேலும் மனம், மொழி, மெய் மூன்றும் ஒன்றி உயர் ஞானத்தில் பொருந்தாத அறிவற்ற பேதையரும் விலங்கில் வீழ்வர். அடுத்து அறச் செயல்களுக்கு ஆற்ற வேண்டியதைச் செய்யாது செல்வத்தைச் சேர்க்கின்ற கபட நெஞ்சம் படைத்தோர் கதியும் விலங்கு கதியே ஆகும்.

834. மன்றில் நின்று பிறன்பொருள் வாங்குவார்
தின்று தேனொடு கட்புலசிற் செல்வார்
நின்ற நீதி கெடுத்துஅய லார்மனை
ஒன்று வார்உழ லும்கதி யும்இதே.

நீதி வழங்கும் பொறுப்புடையோர் நிலைமாறி பிறர் செல்வத்தைப் பெற்றுக்கொள்பவரும், ஊன், கள், தேன் இவற்றை விரும்பி உண்போரும், தொன்றுதொட்டு வரும் நீதி நெறிகளை நாசம் செய்து பிறர் மனைவியை அடைந்தவர்களும் உழல்கின்ற கதியும் விலங்கு கதியேயாம்.

835. ஒன்ற லாதுயி ரில்லை எனச்சொலா
நின்ற தீநெறி யிற்செறி வார்களும்
ஒன்றும் நல்வழக் கோர்ந்துடைந் தான் உழை
வென்றி யாக்குநர் வீழ்கதி யும்இதே.

உயிர் என்பது பரமாத்மா ஒன்றேயாகும். மற்ற ஜீவன்கள் ஏதுமில்லை என்று தன்மையில்லா மார்க்கத்தில் செல்வோரும், ஒரு வழக்கில் யார் பக்கம் உண்மை உள்ளது என்பதை அறிந்திருந்தும் பொய்யானவன் பக்கம் சேர்ந்து அவன் வெற்றி பெறச் செய்யும் கொடியவர்களும் வீழும் கதி விலங்கு கதியே.

836. இல்லை நல்வினை தீவினை இன்னுயிர்
இல்லை யேஇறந் தார்கள் பிறத்தலும்
இல்லை யேதுறக் கத்தொடு வீடெனும்
சொல்லி னார்சுழ லும்கதி யும்இதே.

புண்ணியமுமில்லை, பாபமு மில்லை, அறிவு மயமாகிய உயிர் என்பதும் இல்லை. இறந்தவர்கள் மீண்டும் பிறப்பது மில்லை, விண்ணுலகமும் இல்லை, வீடென்பதும் இல்லை என்று கூறுகின்றவர்கள் சுழலும் கதியும் விலங்கு கதியே.

837. அரச நீதி அழித்தஅம் மன்னனும்
அரச நீதி அழித்த அமைச்சனும்
புரையி னால்பிற ரைப்புணர் தீப்பெணும்
நிரயம் எய்தி விலங்கினும் நிற்பரே.

அரச நீதியை அழித்த மன்னனும் நீதி நெறியைக் கெடுத்த அமைச்சனும் கொடிய மோகனீய பரிணாமத்தால் வேறு ஆடவரைச் சேர்கின்ற தீய மகளிரும் நரகத்திலோ விலங்கு கதியிலோ வீழ்வார்கள்.

(வேறு)

838. அரதனா யுதன்தன் மேக விசயமாம் யானை அந்தப்
பிரசமார் வனத்தி ருந்த பெருந்தவன் விலங்கின் வாழ்க்கை
உரைசெய்தான் இதனைக்கேளா பிறப்பினை உணர்ந்திட் டுனின்
விரவிய கவளம் கொள்ளா தொழிந்துவெய் துயிர்த்த தன்றே.

மனோகரம் என்னும் தேன் நிறைத்த அந்த மலர் வனத்திலே, பெரிய தப முனிவராகிய வஜ்ரதந்த முனிவர், தமது சங்கத்தைச் சேர்ந்த முனிவர்களுக்கு விலங்கு கதிகளின் தன்மைகளை விளக்கினார். இவற்றையெல்லாம் மன்னன் இரத்தினாயுதனுடைய மேக விஜயம் என்னும் பெயருடைய பட்டத்து யானை கேட்டது, (அதே நேரத்தில் அதன் புண்ணியத்தினால், முற் பிறவியைப் பற்றிய உணர்வு (ஜாதிஸ் மரணம்) தோன்றியது) போன ஜன்மத்தில் தான் யார் என்பதையும், என்ன செய்தோம் என்பதையும் உணர்ந்து அது முதல் ஊன் கலந்த உணவை ஏற்காது வெறுத்துப் பெருமுச் செறிந்தது.

839. பிறர்மனை பிழைத்த நெஞ்சில் பெரியவன் ஒருவன் போல
நிறைமதம் புலர்ந்து நைந்து நீசன்என் செய்தேன் என்று
மறமொழிந்து உறவி ஓம்பிக் கவளங்கள் வாங்கா நீங்க
அறைகழல் அரசற்கு ஓடி அறிந்தவர் உணர்த்தி னாரே.

மேலும் அந்த யானையானது: மிகச்சிறந்த பெரியோன் ஒருவன் எவ்வாறோ நிலைமாறி நீதிக்குப் புறம்பாக பிறன் மனைவியை அனுபவித்த பிறகு, அது எவ்வளவு கொடியது என்பதை உணர்ந்து, தனக்குள் தானே வருந்தியது போல் அந்த யானையானது மதம் ஒழிந்து, அறிவற்ற நீசனாகிய யான் என்ன காரியம் செய்திருக்கின்றேன் என நினைந்து நைந்து உருகி பாவத் தொழிலை ஒழித்து அருள்கொண்டு ஊன் கலந்த ஊனை வெறுத்து நின்றது அச்செயலை யானைப்பாகர்கள் ஒலிக்கும் வீரக்கிழலணிந்த வேந்தனிடம் தெரிவித்தார்கள்.

840. மன்னன்வந் தமைச்ச ரோடும் மருந்தறி புலவர் தம்மை
என்னிதற் குற்ற தென்ன வியாதிமற் றியாது மில்லை
மின்னுமிழ் திலங்கும் பூணோய் விலங்கல் போல் நின்றவேழம்
உன்னினால் பிறப்பு ணர்ந்தது ஒக்கும்இவ் வுயிர்ப்பின் என்றார்.

அதைக்கேட்ட அரசன் தனது அமைச்சர்களுடன் சென்று யானையைப் பார்த்து இதற்கு நேர்ந்தது என்ன என்று மருத்துவர்களைக் கேட்கவும், அவர்கள் ஒளி பொருந்திய அணிகளைப் பூண்ட வேந்தே, மலை போன்ற இந்த யானைக்கு உடல் நோய் ஒன்றுமில்லை இது பெருமுச்சுசெறிவதை நோக்கினால் எவ்வாறோ முன் பிறப்பினை உணர்ந்துள்ளது போல் தோன்றுகிறது என்றனர்.

841. ஐயொடு வாத பித்தம் விகாரத்தை யடைந்த தில்லை
மையலும் வெய்ய தொன்றும் மற்றிதற் குற்ற தில்லை
கைம்மலை இதன்கை ஊனிற் கவளங்கள் வைத்த போழ்தின்
ஐயமொன் றின்றி வாங்கின் அறிந்தது பிறப்பை என்றார்.

இந்த யானைக்கு சிலேத்தும, வாத, பித்தம் என்னும் வகைகளில் வேற்றுமை இல்லை, மேலும் கொடிய மயக்கும் இதற்கில்லை. மலை போன்ற இந்த யானையின் துதிக்கையில், ஊன் கலக்காத தூய உணவைக் கொடுத்தால் உடனே ஏற்று உண்ணுமானால் ஐயத்துக் கிடமின்றி முற் பிறவியை அறிந்துள்ளது என்பது உண்மையாகும் என்றனர்.

842. தேனுலாம் தாரி னானும் அப்படிச் செய்க என்ன
ஊனிலாத் தூய நல்ல கவளங்கள் உழையர் நீட்ட
மானமா வாங்கக் கண்டு மன்னனும் வியந்து பின்னைக்
கானில்மா முனிவன் தன்னைக் கண்டடி பணிந்து சொன்னான்.

வண்டுகள் முரலும் மலர்மாலைகள் அணிந்த வேந்தன் அப்படியே செய்யுங்கள் என்று கட்டளையிட, அவ்வாறே பாகர்கள் தூய உணவை அளிக்கவும் அறிவுடைய அந்த யானை உடனே வாங்கி உண்பதைக் கண்டு வியப்படைந்த மன்னன் தனது மலர் வனத்தில் இருந்த மாமுனிவரை அடைந்து தரிசித்தான்.

843. மகர யாழ் வல்ல மைந்தன் ஒருவனைக் கண்ட மற்றப்
புகர்முகக் களிற்றின் மன்னன் முனிவனை வணங்கிப் பின்னை
சிகரமால் யானைக்கு உற்றது அருளுக என்று செப்ப
நிகரிலா போதியால் பார்த்து அரச நீகேண்மோ என்றான்.

மிகச் சிறந்த மகரயாழை அருமையாக இசைக்கும் வல்லவன் ஒருவனைக் கண்டு பணிந்து நிற்கும் நெற்றிப் புள்ளிகளையுடைய ஆண் யானையைப் போல் அந்த அரசனும் மாமுனிவரை வணங்கி எனது பட்டத்து யானைக்கு நேர்ந்தது என்ன என்பதைக் கூறி அருளுங்கள் என வேண்டவும், அம் முனிவர் தமது ஒப்பற்ற அவதி ஞானத்தால் ஆய்ந்தறிந்து வேந்தனே! நான் சொல்லப் போவதைக் கேள் என்றார்.

844. மற்றிந்தப் பரதத் தின்கண் அத்தின புரத்து மன்னர்
பெற்றியால் பெரிய மன்னன் பிரதிபத் திரன்என் பானாம்
வெற்றி வேல் வேந்தன் தேவி வசுந்தரி விலங்கள் போலும்
கற்பினால் புதல்வன் பிரிதி கரன் என்பான் ஒருவன் ஆனான்.

இப்பரத கண்டத்தில் அத்தினாபுரி நகரத்தின் மிகச் சிறந்த மன்னன் பிரிதிபத்திரன் என்பான் வெற்றி தருவேலினையுடைய அவனது பட்டத்தரசி வசுந்தரி என்பாள் மலை போல் மாண்புடைய கற்பரசியாவாள். அவர்களின் புத்திரன் 'ப்ரீதிங்கரன்' என்னும் பெயரினன்.

845. சித்திர மதிஎன் பானாம் மந்திரி துணைவி தீஞ்சொல்
முத்தணி முறுவல் செவ்வாய்க் கமலையாம் கமலை ஒப்பாள்
வித்தகப் புதல்வன் தானும் விசித்திர மதிஎன் பானாம்
மத்தமால் களிற்று வேந்தன் மகனுக்கன்று ஒருவ னானான்.

அவ்வேந்தனின் அமைச்சன் சித்திரமதி என்பான் இனிய சொல், முத்துப் போன்ற பற்கள், புன்முறுவல் பூத்தச் செந்நிற வாய் இவற்றைப் பெற்ற திருமகளுக்கு நிகரான, கமலி என்னும் பெயருடையவள் அமைச்சனின் மனைவியாவாள். அவர்களுக்கு மிகத் திறமையான மகனுடைய பெயர் 'விசித்திரமதி' இவனும் அரச குமாரனும் இணை பிரியா நண்பர்கள்.

846. அருமணி ஆர மார்பர் இருவரும் அனங்கன் அன்னார்
மருவிய புலத்துச் சிந்தை மாசுணம் அன்ன நீரார்
தருமநல் லுருசி என்னும் சாதுவின் பாதம் சேர்ந்து
திருவறம் அருளக் கேட்டோர் புலங்கள் மேல் வெறுப்புச் சென்றார்.

அருமையான மணிமாலைக்களைப் புனைந்த இருவருமே மன்மதனைப் போன்ற எழில் பெற்றவர்கள், ஒத்த மனமுடையோர் ஐம்புல இன்பங்களை நுகர்வதில் நாகர்களுக்கொப்பானவர்கள் இத்தகு இருவரும் ஒரு சமயம் 'தருமருசி' என்னும் தபோதனரை அடைந்து அவர் பாதங்களை வணங்கி, அவர் அருளுரையால் மனம் திருத்தி, பொறி இன்பங்களை வெறுத்து உறுதி பெற்றனர்.

847. மாற்றிடைச் சுழற்றும் மட்டில் புலங்கண் மேல்மற்றி வற்றை
ஆற்றவும் துறக்க மாற்றின் சுழற்றியது அகலு மாகில்
காற்றி எம்மனத்து மட்டைக் கடையிலாத் தெளிவை யாக்கும்
ஆற்றல் சால் துறவென் றோதும் அருமருந் தளிக்க என்றார்.

அடுத்து அவர்கள் முனிவரை நோக்கி : கள்ளைப் போல் மயக்கத்தை ஆக்கும் பொறி புல இன்பங்களில் சிக்கி இந்தச் சம்சாரத்திலே சுழலச் செய்யும் இந்த ஐம்பொறி ஆற்றலை அடியோடு அகற்ற, பிறத்தல், இறத்தலாகிய சம்சார சுழற்சியானது நீங்கி உயிர் மயக்கமாகிய விருப்பு, வெறுப்புக்களைப் போக்கி முடிவற்ற ஞானத்தை ஆக்கும் ஆற்றலுடையது துறவு என்றால் அந்த அருமருந்தாகிய ஜின தீட்சையைத் தாருங்கள் என வேண்டினர்.

848. மாதவன் அருளிச் சித்தி வருக மற்றிவர்கட் கென்னாப்
போதணி குஞ்சி வாங்கப் புணர்ந்துமா தவத்திற் சென்றார்
ஆதரம் பண்ணு நாமத்து அரசிளம் குமரன் பாலின்
மாதிரம் பில்கு தல்ல வார்த்தைமா முனிவ னானான்.

அதைக்கேட்ட மாமுனிவர் இவர்கட்கு நல்லற நன்மை சித்தியாகக் கடவது, என வாழ்த்தி முறைப்படி மலர் மாலைகள் அணியப் பெற்ற தலைமயிர் முதலியவற்றை களைந்து தவத்தை மேற்கொண்டு சென்றனர், பிறகு அவருள் அரசகுமாரன் பால் போல் இனிய நன்மையாகிய கேட்டோரை மகிழச் செய்யும் பேச்சாற்றலைப் பெற்று ரித்தி பெற்ற மாமுனிவனானான்.

849. முனியிளங் களிறு போல்வார் முகிழ்முலைத் தடங்கண் செவ்வாய்
வனிதைய ரோடும் வானோர் மடந்தையர் மகிழும் மாடம்
வினிதையின் புறத்து விட்டார் வேந்திளங் குமர னாய
அனகமா முனிவன் புக்கான் அந்நகர்ச் சரிகைக் கென்றே.

வெறுப்புற்ற யானைக் கன்றுகளைப் போன்ற அம்முனிவர்கள் இருவரும் தாமரை மொட்டு போன்ற தனங்களையும், பெரிய கண்களையும், செந்நிற வானையுமுடைய அழகிய மகளிர்களுடன், தேவ மாதர்கள் சேர்ந்து மகிழும் உயர் மாடங்களையுடைய அயோத்தி நகரத்தின் புறத்தேயிருந்த மலர் வனத்தில் தங்கினார்கள். மிகச் சிறந்த முனிவனாகிய 'ப்ரீதிங்கரன்' நற்குலத்தோர் எதிர்கொண்டு வழங்கும் ஆகாரத்தை ஏற்பேன் என்ற உறுதியுடன், அந்த நகரினுள் சரியைக்குச் சென்றான்.

850. காற்றெதிர் இன்றி மண்ணிற் கண்ணுகத் தளவு நோக்கி
மாற்றினை யெறியும் நூல்வாள் வாய்ப்பிடி நடப்பதே போல்
ஏற்ற நாள் மீனோ டேகும் பிறையென இல்லந் தோறும்
மாற்றின் வெந் துயரம் தீர மருந்துண்பான் போலப் புக்கான்.

ஆகார நிமித்தம் செல்லும்போது எதிர்காற்று வீசாத நேரத்தில், முன்னால் நுகத்தடி தூரம் கூர்ந்து நோக்கியும், சம்சார வாழ்வை ஒழிக்கும் ஆகம நெறிப்படி வாள் நுனியில் நடக்கும் பெண் யானையைப் போன்றும், அன்றைக்குரிய விண்மீனுடன் முறை தவறாமல் செல்லும் சந்திரனைப் போன்றும் கொடிய சம்சாரத் துயரம் தீர மருந்துண்பான் போல் அந்நகர வீதியில் ஆகார நிமித்தம் இல்லங்களைக் கடந்து சென்றான்.

851. ஆயிடைக் கணிகை புத்தி சேனை தன் னகத்தைச் சார்ந்த
மாயமில் தவத்தி னானை வந்தெதிர் கொள்ள மற்ற
வேயெனத் திரண்ட தோளால் விழுமிய தானம் செய்தற்கு
ஏயும் நல் குலத்துள் தோன்றற்கு ஏதுவென் இறைவ என்றாள்.

அப்போது புத்திசேனை என்னும் விலை மாதின் இல்லத்திற்கு எதிரே குற்றமற்ற அம் மாமுனிவன் சென்ற போது மூங்கிலைப் போன்ற திரண்ட அழகிய தோள்களையுடைய அக்கணிகை முனிவனை எதிர்கொண்டு பணிந்து அடிகளே! மா முனிவர்களுக்கு மிகச் சிறந்த தானம் தருதற்குத் தகுதியான உயர் குலத்தில் தோன்றுவது எங்ஙனம் என வேண்டினாள்.

852. தன்னை நித்தித்தல் தக்கோர்ப் பழிச்சுதல் தயாவோ டொன்றி
இன்னுயிர்க் கருளை ஈதல் புலைசு தேன் கள்ளின் மீண்டு
மன்னிய குணத்தின் நிற்றல் மாயமில் மனத்த ராதல்
பன்னருங் குலத்தைப் பண்ணும் பான்மைக்கு நிமித்தம் என்றான்.

நிலையற்றதும் பாபத்திற்குக் காரணமாகியதுமான மொழி வழி இன்பத்தை விரும்பி நிற்கும் நமது மனதை நாமே நொந்து நன்னெறிக்கு முயலுதல், ஞானிகளைப் போற்றி வழிபடுதல், உள்ளத்தில் அருள் கொண்டு மற்ற உயிர்கட்கு உதவி புரிதல், ஊன், கள், தேன் ஆகியவற்றை உண்பதில்லை என விரதமேற்றல், உண்மையான ஆன்ம குணத்தைப் பொருந்தி நிற்றல், வஞ்சனை இல்லாத தூய மணம் பெறுதல் ஆகியவை உயர் குலத்தே உதித்தற்குக் காரணங்களாகும் என்று முனிவர் அருளினார்.

853. அருந்தவன் உரைத்த இன்சொல் அறஅமிர்து ஆர மாந்தித்
திருந்திய குணத்தி னாளும் புலைசு தேன் கள்ளின் நீங்கிப்
பொருந்துவ சீலம் மற்றும் ஆற்றுவ பணிந்து கொண்டாள்
திரிந்து போய் முனிவன் கானின் விசித்திர மதியைச் சேர்ந்தான்.

மாமுனிவன் அருளிய இனிய அற அமிர்தத்தை ஆரப்பருகிய அந்த நற்குண வதியான 'புத்திசேனை' ஊன், தேன், மது இவற்றை தொடுவதில்லை என உறுதி பூண்டு மேலும் தனக்கேற்ற தன்னால் இயன்ற ஒழுக்க சீலங்களையும் முடியக்கூடிய அறச்செயல்களையும் இயற்றுவதாக முனிவரிடம் விரதமாக ஏற்றாள். அடுத்து முனிவரும் அன்று ஆகாரம் இன்றி தடைப்பட்ட நிலையில் மலர் வனம் திரும்பி 'விசித்திரமதி' முனிவரை அடைந்தார்.

854. விசித்திர மதியும் வீர விளம்பித்த தென்கொல் என்னப்
பவித்திர முனியும் பைம்பொன் கணிகையால் பட்ட வெல்லாம்
விரித்துடன் உரைப்பக் கேட்டு வியந்து வெய்துயிர்த்து வேட்கை
உருத்தெழ இருக்கை நாமம் உருவமும் தெரியக் கேட்டான்.

விசித்திரமதி முனிவரும் இவரை நோக்கி ஒழுக்கங்களை உறுதியாகப் போற்றும் வீர புருஷரே நீர் திரும்பி வர இவ்வளவு நேரமாகி விட்டதே என்ன காரணம் என, தூய முனிவராகிய பிரீதிங்கரும், பைம்பொன் அணிகளை அணிந்த கணிகையின் வேண்டுதலையும், அவளுக்குத் தான் அறமுரைத்ததையும் விரிவாகக் கூறினார். அதைக் கேட்டு வியப்படைந்த விசித்திரமதி உள்ளத்தே கொடிய காம உணர்வு தோன்ற பெருமூச்செறிந்து, அவள் பெயர், தோற்றம் வாழும் இடம் முதலியவற்றை ஆசையோடு கேட்டுத் தெரிந்துகொண்டார்.

855. வினையினது எழுச்சி தன்னால் வேதனை வசத்தனாகி
முனியவன் தனிய னாகிப் பாரணைக் கென்று போனான்
தனதிடம் குறுகக் கண்ட தையலாள் உவந்து சால
விநயத்தின் இறைஞ்சிக் கேட்டாள் விரதத்தின் பலனை அன்றே.

தீவினை உதயத்தினால் தோன்றிய காம உணர்சிக்கு வயப்பட்ட அந்த முனிவன் அடுத்த நாள் தான ஆகாரத்திற்குப் போவதாகத் தனியே நகரத்திற்குள் சென்றான். தனது வீட்டிற்கருகில் முனிவரைக் கண்ட புத்திசேனை, நேற்று வந்தவரே என எண்ணி மகிழ்ந்து மிகவும் வினயத்துடன் பணிந்து நேற்று தான்மேற்கொண்ட விரதத்தினால் ஆகும் பயன்களைப் பற்றி வினவினாள்.

856. மோகரா கத்த வாய கதைகளை முனிவன் சொல்லப்
போகரா கத்த வார்த்தைப் புதியனோ முனிவன் என்று
நாகரா கத்திற் கெட்டார் கதைகளை நவிற்றப் பின்னும்
வேகரா கத்தனாக மெல்லியல்வெறுப்பச் சொன்னாள்.

ஆனால் முனிவன் அதற்குரிய பதிலைக் கூறாமல், மனதில் மோகத்தை உண்டாக்கும் கதைகளைக் கூறினான். காம உணர்ச்சியை ஊட்டும் அவனது பேச்சினைக் கேட்ட கணிகை இந்த முனிவர் நேற்று வந்தவரல்ல என்பதை அறிந்து நாகர்களைப் போல் காம வயப்பட்டு கெட்டழிந்தவர்களின் வரலாற்றினை எடுத்துரைத்தாள். அதன் பிறகும தன் தவற்றை உணராத முனிவன், அவள் மீது மேலும் ஆசையுடையவனாக, மென்மையான அக்கணிகை வெறுக்குமாறு மேலும் கூறுகின்றாள்.

857. எலும்புதோல் ஈருள் வெண்ணஞ்சு ஊன் குடர் மலங்கள் மூளை
கலந்த நெய்த் தோர் நரம்பு வழுப்பிவை வேறு கண்டால்
விலங்கிமேல் சேரலின்றி வெறுத்துமிழ்ந்து உவர்த்துப் போவார்
கலந்திவை கிடந்த குப்பை கண்டுகா முறுவ தென்னோ.

எலும்பும், தோலும், ஈரலும், வெண்மையான நச்சுக் கொடிகளும், சதையும், குடலும், வெறுக்கத் தக்கக் கழிவுப் பொருள்களும், மூளையும் இவற்றுடன் இரத்தமும் நரம்பும், கொழுப்பும் ஒன்று சேர்ந்த இவற்றைத் தனித்தனியாகப் பார்த்தால் அருவருத்து அருகில் சேராமல் வெறுத்து விலகி காறித்துப்பி நீங்குவார்கள். இத்தகைய பொருள்களின் கூட்டுச் சேர்க்கையாகிய குப்பையைப் போன்ற இந்த உடலுக்கு ஆசைப்படுவது ஏன்? இது என்ன வியப்பு என்றாள்.

858. உணர்வொடு வார்த்தை பார்த்தல் உவத்தலும் முனிவும் காமத்
துணையிவை தொடர்ந்து நின்றால் தூயவே ஆகும் அன்றிப்
பிணமிது பிணத்தைச் சேர்ந்தால் பிழைத்ததென் பெரிய இன்பம்
அணையுமேல் என்னச் சாலச் சுளித்தவள் வெறுத்துப் போனாள்.

மேலும் அவள் : அறிவினால் உள்ளத் தமைந்த காம உணர்வோடு ஆண் பெண் சேர்ந்து உரையாடுதலும், ஒருவரை ஒருவர் விரும்பி நோக்குதலும், மகிழ்சியடைதலும், பொய்க் கோபமாகிய ஊடலும், ஆகிய இந்த ஐந்தும் காம இன்பம் எய்த துணையாகும். இருவரும் இவற்றைச் சேர்ந்திருந்தால் மனமொத்த இருவருக்கும் தூய இன்பத்துக்கு ஏதுவாகும். அப்படியில்லாமல் ஆண், பெண் சேர்ந்து பெறும் இன்பமானது பிணத்தோடு சேர்ந்து பெறுதற்குச் சமமாகும். விருப்பமற்ற என்னை நீ விரும்புவது வெறுத்தற்குரியது. இந்த எண்ணத்தை விட்டொழி என்றாள். (அதைக் கேட்ட முனிவன்) பிணத்தைச் சேர்ந்தால் இன்பம் கிடைக்கிறது என்றால், அப்படிச் சேர்வதில் தவறென்ன என்றான். அதைக் கேட்ட அவள் முகம் சுளித்து வெறுத்து பேச்சற்று விலகிப்போனாள்.

859. மாலைசாந்து எண்ணெய் சுண்ணம் மஞ்சள்வான் கலிங்கம் வேறாச்
சாலநாள் இருக்கினும் தம் குணம்செவ்வி அழிந்தி டாவாம்
ஊனுலாம் உடம்பைச் சேர்ந்தால் ஒருகணத் தழியும் வண்ணம்
வானெலாம் வணக்கும் சீலம் மாய்தல்எண் ணாது சொன்னான்.

மலர்மாலை, சந்தனம், நறுமணத்தைலம், சுண்ணம், மஞ்சள் முதலிய நறுமணப் பொருள்களும் பட்டுத் துணிகள் முதலியவையும் எவ்வளவு நாள்கள் இருந்தாலும் அவற்றின் குணங்கள் குறைவதில்லை. ஆனால் அவைகள் ஊனாலாகிய இந்த உடலைச் சேர்ந்த சிறிது நேரத்திலே தமது தன்மை இழந்து கெட்டுப் போகின்றன. இவ்வுடலின் தன்மை இத்தகையது என்பதைச் சிந்திக்காமல், அமரர்களால் போற்றற்குரிய உயர் ஒழுக்கம் அழிவதைக் குறித்து எண்ணாமல் கணிகையிடம் இத்தகைய இழிந்த வார்த்தைகளைக் கூறினான்.

860. மோகத்தால் முடையுடம் பின் நாற்றத்தை முனித லின்றிப்
போகத்தால் கழுமி நிற்கும் புல்லறி வாளராகும்
சேகற்கா முடையு டம்பைச் சேர்தல்மற் றொன்று மென்றிட்டு
ஆகத்தான் நினைக்க மாட்டாது அருத்தவத் திழிந்து நின்றான்.

மோகனீய கர்மத்தினால் பிணமாகும் உடலின் தாங்கற்கரிய நாற்றத்தில் வெறுப்படையாது, அந்த உடல் இன்பத்தில் மூழ்கி நின்றவர்கள் அற்பத்தனமான அறிவற்றவராவர். ஊன் உண்ணும் பறவைகள் விரும்பும், இந்த நாற்றம் மிக்க உடலைச் சேர்வதால் இன்பம் கிடைக்கும் என்று நம்பி அதனால் அடையும் பாபத்தின் கொடுமையை, உய்த்துணராது மிகவும் அருமையான தவத்திலிருந்து வழுவி கேடு எய்தினான்.

861. புழுக்குலம் பொதிந்த யாக்கை புனிதனேன் பொருந்தி னேன்முன்
அழுக்குடம் பிதன்கட் சென்ற ஆர்வத்தால் என்று தன்னை
இழித்திடாது அழுக்குச் சோரும் புழுக்குலத் திச்சை தன்னால்
வழுக்கினான் மாற்றை ஆற்றக் கெடுக்குமா தவத்தின் மாதோ.

மிகச்சிறந்த புனிதமான ஆன்மாவாகிய யான்விபாவ குணமாகிய ஆர்வத்தால் புழுக்கள் நெளியும் அழுக்குகள் நிறைந்த இந்த உடலில் பொருந்தியுள்ளேன் என்று தன்னைத்தான் இகழ்ந்து நோவதை விட்டு மிகவும் இழிந்த இச்சையால் அழுக்கொழுகும் சரீரத்தின் மேல் ஆசை வைத்து பிறப்பை ஒழித்து உயர்நிலை அளிக்கவல்ல தவ நிலையிலிருந்து நழுவி வீழ்ந்தான்.

862. பொறிப்புலத்து எழுந்து போகத் தாசையைப் போக விட்டு
வெறுத்தெழு மனத்த ராகின் வீட்டின்பம் விளையு மன்றி
மறுத்தெதி ராகச் செல்லின் மாற்றிடைச் சுழல்வ ரென்னும்
திறத்தினை நினைத்த லில்லான் சீலத்தின் இழிந்து சென்றான்.

பொறி புலன்களால் அடையும் சுகத்தின் மீதுள்ள ஆசையை ஒழித்து வெறுத்து உண்மையான உயர்நிலையில் ஒன்றிய உள்ளத்தராய் நின்றால், வீட்டின்பம் எய்தும். அதை விடுத்து நேர்மாறாகச் செல்லின், சம்சார வாழ்வில் சுழல்வர் என்னும் ஆகம உண்மையைச் சிந்திக்காமல் சீல ஒழுக்கத்தினின்றும் இழிந்து தாழ்வுற்றான்.

863. உண்டுநாம் விட்ட வல்லா உருவில்லை உலகத் தின்கண்
வண்டுலாம் கூந்த லாகி மாசெலாந் திரண்ட தன்றிக்
கண்டதொன் றில்லை காமம் கண்ணினைப் புதைத்த காலத்து
உண்டுநாம் விட்ட ஆசை உவர்த்தும்என்று உணர்வி லாதான்.

அறிவு மய ஆன்மாவான நாம் அனாதிகாலமாக மயக்கமான அறிவால் அதாவது விபாவ குணத்தால் இவ்வுலகில் எடுக்காத உருவமில்லை. மேலும் இவ்வுலகில், வண்டுகள் ஒலிக்கும் கூந்தலுடன் கெட்ட நாற்றமுடைய அணுத்திரளின் கூட்டமாகக் கருதக் கூடியதே பெண் உருவம் இதைத் தவிர்த்து கண்டது ஒன்றுமில்லை. காம உணர்ச்சியானது ஞானக்கண்ணை மறைத்ததால் கணக்கற்ற தடவை நாம் அனுபவித்து விடப்பட்ட இந்தக் காம உணர்ச்சியை வெறுக்கும் உணர்வற்றவனாகி விட்டான் இந்த விசித்திரமதி முனிவன்.

864. விலையிலா வாச மாலை தூமத்தால் வேய்ந்த கூந்தல்
தலையின் றிழிந்த காலைத் தான்துறந் திட்ட தேபோல்
மலையன தவத்து வேடம் கண்டுமுன் வணங்கி மாண்ட
நிலையினின்று இழியப் பின்னை நேரிழை இகழ்ந்திட் டாளே.

மிக்க மதிப்புடைய நறுமண மலர்களால் அலங்கரிக்கப்பட்டதும், அகிற்புகை ஏற்றப்பட்டதுமான கூந்தல் அதற்குரிய இடமான தலையினின்று நீங்கின காலத்தில், அதை முன்பு உயர்வாகக் கருதிப்போற்றியவளே வெறுத்து ஒதுக்குவது போல் மலை போன்ற மாமுனிவர் வேடத்தைக் கண்டு பணிந்து வணங்கிய சிறந்த அணிகளை அணிந்த புத்திசேனை அந்த முனிவன் நிலை தவறி இழிந்ததை அறிந்த பின்பு மிகவும் இகழ்ந்தாள்.

865. புகழ்வரம் பாய புத்தி சேனையாம் தோகை தன்னை
இகழஅங் கெழுந்த கோபத் திசைந்தசோ கத்தோ டேகித்
தகைநெடுங் குழலி னாளைச் சாரலாம் உபாயம் தேடி
அகநகர் எங்கும் புக்கான் ஆவதொன் றிலாமைக் காணா.

புகழின் எல்லையில் நின்ற புத்திசேனை என்னும் அழகிய மயில் போன்ற கணிகையானவள் தன்னைப் பெரிதும் இகழ்ந்ததால் மிக்க சினத்தில் ஆழ்ந்த முனிவன், மன வருத்தத்துடன் அவ்விடம் விட்டு நீங்கி அழகிய நீண்ட கூந்தலையுடைய அவளை அடையும் வழியாது என ஆராய்ந்து நகரமெங்கும் அலைந்தும் ஒன்றும் ஆகாமை அறிந்தான்.

866. கடையன் அப்புரத்து வேந்தன் கந்தமித் திரன் என்பானாம்
உடல்சுவைத் துண்டு செல்வான் உவப்பதோர் படியின் ஊனை
மடையனாய் சமைத்துக் காட்டி மற்றந்த மன்ன னால்அத்
துடியிடை புத்தி சேனை தன்னகந் துன்னி னானே.

பிறகு அத்தின புரத்து வேந்தனும் நன்மை தீமையுணராத பேதமை பொருந்தியவனும், ஊன் உணவை விரும்பி உண்பவனுமாகிய கந்த மித்திரன் என்பவனை அடைந்து, அவன் மகிழும் வண்ணம் அவனுக்குச் சமையல் காரனாகி தன் திறமையால் ஊனை விதவிதமாகச் சமைத்துக் கொடுத்தப் பிறகு அவன் தயவால் தான் விரும்பிய புத்திசேனையை அடைந்தான்.

867. மௌவலம் குழலிக் காக மயங்கிமா தவத்தை விட்டு
செவ்வியைக் காட்டித் தீற்றச் செறிந்திட்ட பாவந் தன்னால்
அவ்வுடல் விட்டு வந்து அவ்வளியன் இவ்யானை யானான்
இவ்வனத்தில் யான்தி லோகப் பச்சத்தி இயம்பக் கேளா.

முல்லை மலர்ச் சூடிய சூந்தலையுடைய அந்தக் கணிகைக்காக மயங்கி மாபெரும் தவத்தைக் கைவிட்டு ஊன் உணவை நன்கு சமைத்துக் கொடுத்த பாபத்தால் மனிதப் பிறவியை நீத்து உனது பட்டத்து யானையாக இருக்கின்றான். நான் இவ்வுலக இயல்பை விளங்கும் திரிலோக 'பிரஜ்ஞப்தி' என்னும் ஆகமத்தை விரித்துரைத்ததை இந்த யானையும் கேட்டிருக்கின்றது.

868. அப்பிறப் பறிந்து நொந்திட்டு அவலமுற்று அழுந்தி யின்று
மெய்ப்பட வுணர்வு தோன்ற விரதசீ லத்த தாயது
இப்படித்து இதன்தன் செய்கை ஏந்தளிமுலை யினார் தம்
துப்புறழ் தொண்டைச் செவ்வாய்ப் பயனிது சொல்லின் என்றான்.

அதைக்கேட்டதால் அடைந்த ஆன்ம சக்தியாலும் பாபம் சற்று அடங்கியிருந்ததாலும் முற்பிறவியில் தான் 'விசித்திரமதி' என்னும் முனிவனாக இருந்ததை முற்பிறவியறியும் ஜாதிஸ் மரணத்தால் அறிந்து மனம் நொந்து வருந்தி துன்பமடைய, உண்மையான நல்லறிவு தோன்றியது. இந்த யானையின் நிலை இதுதான் மேலும், நிமிர்ந்த தனங்களையும், பவளத்தையும், கொவ்வைக்கனியும் நிகர்த்த சிவந்த வாயினையுடைய பெண்களால் எய்தும் பயன்கள் இத்தன்மையதே என்று முனிவன் கூறினார்.

869. விரிதிரை வேலி ஞாலக் காவலர் விழும வெந்நோய்
எரிபுரை நரகத் தன்றி வீழ்ந்திடார் துன்ப வெள்ளத்
திரைபொரு கடலை நீங்கித் துறந்துடன் செறிந்து நோற்பின்
வருமெதிர் கொள்ள வீடும் வானவர் உலகு மன்னா.

மேலும்; அரசனே! அலைவீசும் கடலை வேலியாகவுடைய இவ்வுலக ஆட்சியைப் பெற்றுள்ள மன்னர்கள் கொடிய துன்பந்தரத்தக்க ஆசை என்னும் நோய்குட்பட்டால் அவர்கள் தீப்போன்று நரகத்தில் வீழ்வதன்றி மற்ற உயர்ந்த தேவ கதியில் செல்ல இயலாது. மேலும் துன்பமாகிய நீரில் பிறத்தல், இறத்தல் என்னும் அலைகள் ஞானமாகிய கரையை மோதும் இந்தப் பிறவிக் கடலை விட்டு விலகி அகம், புறம் என்னும் பன்னிரு தபங்களை ஏற்று விஷய, பிராணி சம்யங்களில் பொருந்தி நிலைத்தால் வீடுபெறலாம் என்றார்.

870. விலையிலா பணியை விட்டுக் காசத்தை மேவ லன்றித்
தலைவனாய்த் தாயை விட்டுத் தன்னடி யாளை ஓம்பல்
நிலையிலா போகம் மேவி நின்றுநல் லறத்தை நீங்கல்
இலைகுலாம் மகரப் பைம்பூண் ஏந்துதோள் வேந்த என்றான்.

மேலும், பசுமையான பொன்னால் இலைக்கொடிகள் சூழ மகர மீன் வடிவில் அமைக்கப்பட்ட (மகர வளை) அணியை அணிந்த வேந்தனே! நிலையற்ற பொறி இன்பங்களை விரும்பி ஏற்று நன்மை தரக் கூடிய ஆன்ம இன்பத்தைப் புறக்கணித்து மயங்கிக் கிடத்தல் எதற்குச் சமம் என்றால், மதிப்புமிக்க இரத்தினத்தை நீக்கி மின்னுகின்ற கண்ணாடிகல்லைப் பெற்றதற்கு ஒப்பாகும். மேலும் குடும்பத் தலைவனாகி ஈன்ற தாயைக் கைவிட்டு தனது மனைவியை மட்டும் அன்புடன் போற்றுதலுக்கு ஈடாகும் என்றார்.

871. கடலெனத் தோன்றும் நீலக் கானலை நீரென் றோடி
உடலிழந்து உழையைப் போல உறுதிஒன்று ஓர்வ தின்றி
இடரினை ஈனும் இன்னாப் பயில்புலத் திவறிச் சென்றேன்
படுதுயர் நரகந் தன்னிற் பதைப்பனோ அடிகள் என்றான்.

மேலும், பரந்த கடல் போல் தோன்றும் நீலநிறக் கானலை நீர் என நினைந்து அலைந்து இறந்து போகும் மானைப் போல் ஆன்மாவிற்கு உறுதியாகிய ஈடற்ற உயர் குணத்தைப் பெற அறியாது மயங்கி தீமை பயக்கும் பொறி வழி இன்பங்களைப் பற்றி மிகவும் விரும்பிய வாழ்க்கையை இது வரை நடத்தினேன், இறைவனே இனியும் கொடிய துன்பங்கள் நிறைந்த நரகத்தில் வீழ்ந்து துடிக்கச் செய்யும் வாழ்வைத் தொடர்வேனோ! மாட்டேன் என்றான்.

872. எரியிடைப் பதங்கம் போன்றும் இளம்பிடிக் களிறு போன்றும்
கரிமதத் தளியைப் போன்றும் கானத்தின் அசுணம் போன்றும்
விரகினால் தூண்டிற் பொன்னை விழுங்கிய மீனைப் போன்றும்
தெரிவின்றி நுகர்ந்த வெல்லாம் தீரயான் துறப்பன் என்றான்.

சுடரில் விழும் பூச்சினைப் போன்றும் பெண் யானையைப் போன்றும், யானையின் மத நீரை மொய்க்கின்ற வண்டுகள் போன்றும், இசைக்கு மயங்கும் அசுணம் போன்றும், தூண்டில் புழுவை விழுங்கிய மீனைப் போன்றும், தெளிவில்லாமல் அழிவில் சிக்கி நான் அனுபவித்துப் பெற்ற பாபங்கள் அனைத்தும் ஒழியும் வண்ணம் துறவை மேற்கொண்டு தவத்தைக் கைக்கொள்வேன் என்றான்.

873. வினைப்பயன் தன்னை வேங்கை முன்விடை போல அஞ்சிச்
சினக்களிற் றுழவன் செம்பொன் முடியினை மகனுக்கு ஈந்திட்டு
இனத்திடை நீங்கிப் போகும் ஏறென ஏந்து கொள்கை
மினற்கொடிக் குழாத்து நீங்கி மீண்டுபோய் வனம்புக் கானே.

அடுத்து, சினம் மிக்க யானைகளின் தலைவனாகிய அந்த அரசன், தன் எதிரில் புலியைக் கண்டு நடுங்கும் எருதைப் போல் தீவினைப் பயன்களை அறிந்து நடுங்கி தனது பொன் முடியை மகனுக்குச் சூட்டி அரசைத் துறந்து பசுக்கூட்டத்தை விட்டு விலகிச் செல்லும் எருதைப் போல் நிமிர்ந்த தனங்களையுடைய மின்னல் கொடி போன்ற அழகிய மகளிர் கூட்டத்திலிருந்து நீங்கி, முனிவர் இருக்கும் மனோகர வனம் சென்றான்.

874. இடையறாது ஏற்ற காலத்து ஈயுமோர் முகிலைப் போலும்
வடிவுடைத் தடக்கை வேந்தன் வச்சிர தந்தன் பாதம்
முடியுற வணங்கி மூவார் தொழுதெழு வடிவம் கொண்டான்
இடிமுர சதிர்ந்த தெங்கும் ஏத்தொலி பரந்த தன்றே.

பெய்ய வேண்டிய காலத்தில் ஒழுங்காக மழைபெய்யும் கார் முகிலைப் போன்ற, நீண்ட கொடைக்கரங்களையுடைய இரத்தினாயுத வேந்தன், வஜ்ரதந்த முனிவருடைய அடிகளில் நிலனுறப் பணிந்து முதுமை எய்தா அமரர்களும் போற்றும் மேலான துறவை மேற்கொண்டான். அரசன் துறந்த செய்தியைத் தெரிவித்து முரசு முழங்கியது, போற்றிப் புகழும் பேச்சொலி எங்கும் பரந்தது.

875. வரையினை உருக்கும் வச்சி ராயுதன் துறந்த அந்நாள்
அரதன மாலை மைந்தன் காதலால் அகத்தி ருந்தாள்
உரையினுக்கு அரிய வண்ணம் மகனொடும் துறந்திட்டு உள்ளம்
புரையெலாம் நீங்கி நின்று புற்கலம் வருந்த நோற்றாள்.

வலிமை மிக்க மலையையும் உடைத்தெறியும் ஆற்றல்மிக்க வஜ்ராயுத வேந்தன் துறந்து சென்ற காலத்தில், அவன் மனைவி இரத்தினமாலை மகன் இரத்தினாயுதன் மீதுள்ள அன்பினால் உடன் இருந்தாள். இப்போது தனது மகனும் துறவை மேற்கொண்டதால் தானும் அருமையான துறவை ஏற்று ஆர்யாங்கனையாகி மனத்தின் மாசினை நீக்கி உடல் வருந்த விரதங்களை ஏற்று நோற்கலுற்றாள்.

876. கச்சணி முலையி னார்பால் காதல்போல் தவத்தின் கண்ணும்
மெச்சிய மனத்த னாகி வெயில்நிலை ஆதி யோகின்
பச்சுதி யின்றி நின்று காலங்கள் பலவு நோற்றிட்டு
அச்சுத கற்பம் புக்கான் அரதன மாலை யோடும்.

இரத்தினாயுத வேந்தன் தான் இல்லறத்தில் இருந்தபோது எப்படி பெண்கள் பால் ஆழ்ந்த காதல் கொண்டிருந்தானோ அது போலவே, தவத்திலும் போற்றும் வண்ணம் உறுதியான மனமுடையவனாகி, வெயில், மழை, பனி ஆகிய முக்கால யோகங்களில் பொருந்தி, உறுதியாக நிலைத்து நின்று நீண்ட காலம் தவமியற்றி முடிவில் அச்சுத கல்ப தேவனானான். தாய் இரத்தினமாலையும் அதே கல்பமடைந்தாள்.

877. இருபத்தீ ராழி காலத்து இருபத்தீ ராயி ரத்தாண்டு
ஒருவித்தாம் அமுத முண்ணா உம்பரின் பத்தை யுற்றார்
மருவித்தான் யோகின் நின்றான் வச்சிரா யுதனும் பின்னை
நரகத்தாழ்ந்த அரவின் செய்கை நவிற்றுவன் நாகர் கோவே.

தரணேந்திரனே! அச்சுத கல்பத்து தேவர்களான அவ்விருவரும், இருபத்திரண்டு கடற்கால ஆயுளைப் பெற்று, இருபத்திரண்டாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை மனதினால் எண்ணிய மாத்திரத்தில் அமுதம் உண்டதாக நிறைவெய்தி, தேவ சுகத்தை அனுபவித்திருந்தார்கள். இங்கே வஜ்ராயுத முனிவர் ஆன்ம பாவனையோடு யோகத்தில் நிலைத்து நின்றார் அடுத்து முன்னரே நான்காவது நரகத்தில் சென்ற மலைப்பாம்பினது செய்தியைக் கூறுகின்றேன் கேள் என்றான் ஆதித்யபன்.

878. பருமித்த கடல்கள் பங்கப் பிரபையில் பத்தும் பெற்று
நரகத்தின் அரிதின் போந்து நால்வகை ஆழி காலம்
திரததா வரத்தில் சென்று தீயவாம் துயரம் உற்றுப்
பரதத்தில் கச்சை என்னும் புரத்தின்பால் வேட னானான்.

'பங்கப்ரபை' என்னும் பெயருடைய அந்த நான் காம் நரகத்தில் பத்து கடற்காலமாகிய உயர்ந்த ஆயுளைப் பெற்று அரிதாக அந்த நரகாயுள் நீங்கி அடுத்து நான்கு கடற்காலத்தளவும் விலங்கு, தாவர கதிகளில் துன்புற்று உழன்ற பிறகு பரத கண்டத்தில் கச்சை என்னும் நகரத்தை அடுத்த காட்டில் வேடனாகப் பிறந்தான்.

879. தாருண கிரணன் என்னும் வேடன்தன் மனைவி தாழ்ந்த
வாரிணை யனைய கொங்கை மங்கிதன் சிறுவன் மிக்க
தாருண னாகித் தோன்றித் தலையிலாத் தால துண்டம்
சூரெரி கவர்ந்த தொப்பான் கொடுமையால் கனலி ஒப்பான்.

அவன் பெயர் தாருண கிரணன் என்பது, தோல்பைகளைப் போன்ற தனங்களையுடைய அவன் மனைவி மங்கி என்பவளுக்கு அரிதாருணன் என்னும் மகனாகத் தோன்றி நெருப்பில் வெந்து கருகிய பனங்கட்டை போன்ற கரிய நிறமுடைய அவன் நெருப்பைப் போல் கொடியவனாகி விளங்கினான்.

880. பாவந்தான் உருவம் கொண்டெவ் வயிரையும் படுக்க வேண்டிச்
சாபம்வெஞ் சரங்க ளேந்தித் திரிகின்ற தனையான் வந்து
கோபந்தா னாதி யுள்ளான் கொலையிலா னந்தக் தோடும்
வேபந்தான் உயிர்கட் காக்கி விலங்கல்மே லேறி னானே.

பாபமே மனிதவுரு வெடுத்து உயிர்களைத் துன்புறுத்த வில்லையும் அம்பையும் ஏந்தித் திரிவதைப் போல் தோன்றிய அவன் எப்போதும் கடும் சினம் மிக்கவனாய் உயிர்களை வதைப்பதில் மிகவும் மகிழ்ந்து பிராணிகளை நடுங்கச்செய்தான். ஒரு நாள் தற்செயலாக மலையுச்சிக்கு ஏறிச் சென்றான்.

881. வரைமிசை யோகின் நின்ற வச்சிரா யுதனைக் காணா
எரியென விழித்து வேரத்து எழுந்ததோர் கோபத் தீயால்
வரையினை முறுக்கு வான்போல் கணத்திடை வந்து கூடித்
தெரிவிலான் செய்த தீமை செப்புதற் கரிய தொன்றே.

மலைமிசை யோகத்திலிருந்த வஜ்ஜிராயுத முனிவரைக்கண்ட வேடன் வைரத்தினால் நெருப்பை போல் கண்களை விழித்து பொங்கிய கோபத்தீயால் மலையையே அழிப்பான் போல கண நேரத்தில் முனிவரை நெருங்கிய அந்த அறிவற்றவன் செய்த கொடுமையைக் கூறுவதற்கரியதாகும்.

882. கூர்நுனைப் பகழி கொண்டு செவியிடைக் குடையும் குத்தும்
கார்முகம் கொண்டு நின்று மத்தகத் தடிக்கும் கையில்
கூர்முளின் சலாகை யேற்றும் குறங்கிடைக் கொடியைச் சுற்றி
நீர்விழக் கடையும் பாதத் தடிக்கும்நீள் முளையை நின்றே.

அந்தப் பாபியானவன், கூரிய அம்பினை முனிவரின் காதில் விட்டுக் குடைந்தும், குத்தியும், வில்லால் தலையில் அடித்தும் முள் போன்ற சலாகைகளால் கையில் ஏற்றியும், தொடைகளில் காட்டுக் கொடிகளைச் சுற்றி இரத்தம் கொட்டுமாறு கடைந்தும், முளைக் கொம்புகளால் கால்களில் அறைந்தும் கொடுமைப்படுத்தி அக்கீழ்மகன் மேலும்,

883. அச்சுமுள் கொண்டு சுற்றும் அடித்திடும் வயிர ஆணி
உச்சியுள் புடைத்தி ழுத்திட் டோடியங் கெறியும் கல்லால்
கைச்சிலை கணையைக் கோத்துக் காதள வெய்த வாங்கி
அச்சுறத் தோன்றும் இவ்வாறு இடும்பைகள் அனேகம் செய்தான்.

முள் நிறைந்த அச்சங்கரணைக் கொம்பால் உடல் முழுதும் அடித்தும், வலிமை மிக்க ஆணியைத் தலையில் அடித்து இழுத்தும், ஓடிச் சென்று கற்களால் எறிந்தும் வில்லில் அம்பைப் பூட்டி அதைக் காதுவரை இழுத்து எய்வான் போன்று பயங்கரமாக நின்றும், பலவித இடும்பைகளைச் செய்தான்.

884. எரிசொரிந் திட்ட வண்ணம் இவன்செய்த இடும்பை யெல்லாம்
தெரிவதொன் றின்றி நின்றுஅம் முனிவனும் பொறுத்துச் சிந்தைத்
தருமநல்தியானத் தோடும் சென்றுதன் னுடம்பு நீங்கித்
திருமலி உலகத் துச்சி சவ்வட்ட சித்தி புக்கான்.

வேடனால் இழைக்கப்பட்ட நெருப்பைக் கொட்டுவது போன்ற இத் துன்பங்களை எல்லாம் அறிதலின்றி ஆன்ம பாவனையில் அந்தக் காரணங்களை நிறுத்தி அம் முனிவன் 'வதைபரீஷகஜயம்' செய்து தருமத்யானத்திலே பொருந்தி நின்று இறுதியில் உடலை நீத்து உகலத்துச்சியில் உள்ள மிகச் சிறந்த சர்வார்த்த சித்தி என்னும் விமானத்தில் தேவனாக அவதரித்தார்.

885. முப்பத்து மூன்று தன்னால் முரணிய ஆழி காலம்
முப்பத்து மூன்று ஆயிரம் இடை விட்டும் உண்ணா
முப்பத்து மூன்று பக்கம் உயிர்ப்பிடை முடிவு பெற்றான்
முப்பத்து மூன்று அதிச்சா ரினையிலா முனிவன் தானே.

முப்பத்து மூன்று பிராயச் சித்தங்களை இடையூறு இன்றி முடித்த அம் முனிவன் முப்பத்து மூன்று கடற்கால ஆயுளைப் பெற்று, முப்பத்து மூன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை மனதால் அமுதம் உண்டு பதினாறரை மாதத்திற்கு ஒரு தடவை மூச்சுயிர்த்து அமர வாழ்வெய்தினான்.

886. அவதிகள் விமானத் தின்கீழ் நாழிகை அளவும் செல்லும்
உவதிகள் யாது மின்றி ஒப்பிலா உருவத் தாலே
சிவகதி யாரைப் போல இன்பத்துச் செறிந்தி ருந்தான்
தவநெறி நின்ற வீரன் தன்மையார் அறிய வல்லார்.

அத்தேவனுடைய அவதி ஞானம் அவனுடைய விமானத்திற்குக் கீழே 'திரச நாளி' முழுமையும் அறிய வல்லது. மகளிர் தொடர்பின்றி இணையற்ற தேவ உருவத்தால் ஏறக்குறைய வீடுபெற்றவர், எய்தும் இன்பத்தில் சேர்ந்திருந்தான். தவ நிலையில் தளர்வின்றி கொடுந்துன்பங்களைப் பொறுத்துக் கொண்ட அம் மாமுனிவனுடைய தன்மையை அறிய வல்லார் யார்.

887. கூன்சிலைப் பகழி கோத்துக் கொடியவன் குழைய வாங்கி
மான்களும் மரையும் வீழ்த்து முனிவனை வருத்திப் பாவி
தான்சில நாளில் ஏழா நரகத்தைச் செறிந்து காட்டில்
தேன்சுடு தீயின் ஈப்போல் திகைத்துப்போய் நிலத்து வீழ்ந்தான்.

வில்லை வளைத்துக் கணைகளைத் தொடுத்து மான்கள், மற்றும் சமரீ போன்ற விலங்குகளைக் கொன்று குவித்து, மாமுனிவரையும் கொடுமையாக வருத்திய அந்தப் பாபியாகிய வேடனின் ஆயுள் ஒழிய ஏழாவது நரகத்தில் ஆழ்ந்து காட்டுத் தீயில் வீழ்ந்த தேனீப் போல் மயங்கி நரகத்தின் மேல் பகுதியிலிருந்து தலைகீழாக வீழ்ந்தான்.

888. வீழ்ந்தஅக் கணத்துத் தண்டால் விழுப்பற வுக்கியிட்டுச்
சூழ்ந்தவர் உருக்கும் செம்பின் குட்டுவத்து உடம்பு காட்டிட்டு
ஆழ்ந்தவன் தன்னை வாங்கிச் செக்கிலிட் டரைத்திட்டு ஆற்றச்
சூழ்ந்தமுள் இலவ மேற்றித் துயரங்கள் பலவும் செய்தார்.

விழுந்த அந்தக் கணமே அங்குள்ள பழைய நரகர்கள், இவன் கொடுமை ஒழியுமாறு தடிகளால் தாக்கி அடித்து உருகிய செப்புக் குழம்பில் உடலை அமிழ்த்தி அதில் துடிக்கும் அவனை மீண்டும் இழுத்து செக்கில் போட்டு அரைத்து உடல் நொறுங்குமாறு ஆட்டி மிக நெருக்கமான முட்களையுடைய மரத்தின் மேல் ஏறும்படிச் செய்து இத்துடன் பல்வேறு விதமாக வாட்டினார்கள்.

889. பாவைதான் அடித்த பந்தில் பாவிதான் புகையைஞ் ஞூற்றை
ஓவிலா தெழுந்து வீழ்ந்து ஐஞ்ஞூறு வில் உயர்ந்துடம்பால்
தாவிலாத் துன்ப முற்றான் தன்னிலை தளர்க்கொ ணாத
ஆயுவால் ஆங்குப் பெற்ற ஆழி காலத்தை எல்லாம்.

அவனுக்கு அமைந்த ஆயுள் காலத்தின் அளவைக் குறைக்க முடியாத நிறை நாள் பெற்று தனக்குரிய கடற்காலம் முழுமையும் ஐநூறு வில் உயரம் ஆகாயத்தில் கிளம்பி தலைகீழாக விழுந்து இந்த நிலையில் மாற்றமின்றி துன்பமுற்றான்.

890. ஆர்வத்தால் ஒருவன் ஆனை ஆயினான் ஒருவன் நின்ற
வேரத்தால் நரகத் தாழ்ந்தான் விளம்பிய இலார்கள் இன்ப
பாரத்தை முடியச் சென்றார் பன்னகர்க் கிறைவ பாராய்
ஆர்வம் செற்றங்க ளின்றிப் பகைநமக் கில்லை கண்டாய்.

ஆசையால் சிம்ம சேன மன்னன் யானையாகப் பிறந்தான். அவன் மீது கொண்ட வைரத்தால் சத்தியகோடன் நரகத்தில் மூழ்கினான், விருப்பு வெறுப்பில் சமநிலை பெற்ற மற்றவர்கள் இன்பங்கள் அனைத்தும் எய்தினார்கள். பவணலோகத் தலைவனாகிய தரணேந்திரனே! நமக்கு ஆசை, செற்றம் பகைவர்களைத் தவிர வேறு பகை இல்லை. இதை எண்ணிப்பார் என ஆதித்யாபன் கூறினான்.

வச்சிராயுதன் அணுத்தரம் புக்க சருக்கம் முற்றுப் பெற்றது